Send a Message… **ON SMSREADER** to: **09870807070** for FREE ALERTS!

# உயிரியல் - 7

1. கீழ்காணும் வாக்கியங்களைக் கவனி
(i) கிளாமிடோமோனாஸ் அமீபா போன்றவை ஒரு செல் உயிரிகளாகும்.
(ii) ஒரு செல் உயிரினங்களில் வளர்சிதை மாற்றச் செயல்கள் அனைத்தும் ஒரே செல்லில் நடைபெறுகின்றன.
இவற்றுள்:
**A)** (i) சரி, (ii) தவறு **B)** (i) சரி, (ii) சரி
**C)** (i) தவறு, (ii) சரி **D)** (i) தவறு, (ii) தவறு

2. உயிரினங்களின் அமைப்பு மற்றும் செயல் அலகாக இருப்பது
**A)** செல் **B)** திசு
**C)** உட்கரு **D)** நுண்குமிழ்

3. கீழ்காண்பவற்றுள் மாறுபட்ட ஒன்று எது?
**A)** பாரன்கைமா **B)** தசைச்செல்
**C)** ஸ்கிளிரென்கைமா **D)** கோலன்கைமா

4. இது விலங்குசெல்களில் காணப்படுவதில்லை
**A)** செல் சவ்வு **B)** உட்கரு
**C)** நுண்குமிழ் **D)** செல் சுவர்

5. இவை நிறமற்ற கணிகங்கள் ஆகும்
**A)** சைட்டோபிளாசம் **B)** குரோமோபிளாஸ்ட்
**C)** லியூக்கோபிளாஸ்ட் **D)** குளோரோபிளாஸ்ட்

6. புரத உற்பத்தியில் மிக முக்கிய பங்கு வகிப்பவை
**A)** லைசோசோம் **B)** ரைபோசோம்
**C)** உட்கரு **D)** சென்ட்ரோசோம்

7. இவை "தற்கொலைப்பைகள்" என அழைக்கப்படுகின்றன
**A)** லைசோசோம் **B)** ரைபோசோம்
**C)** உட்கரு **D)** சென்ட்ரோசோம்

8. "செல்லின் சக்திநிலையம்" எனப்படுவது
**A)** செல் சவ்வு **B)** உட்கரு
**C)** நுண்குமிழ் **D)** மைட்டோகாண்ட்ரியா

9. இவை செல் சுரத்தலிலும், சேமித்தலிலும் பங்கேற்கின்றன
**A)** மைட்டோகாண்ட்ரியா **B)** கோல்கை உறுப்புகள்
**C)** சென்ட்ரோசோம் **D)** உட்கருசாறு

10. செல்லின் உள் அழுத்தத்தை நிலைநிறுத்தும் பணியை செயல்படுத்துவது
**A)** செல் சவ்வு **B)** உட்கரு
**C)** நுண்குமிழ் **D)** செல் சுவர்

7th - BIOLOGY

11. ஒரு மைக்ரான் என்பது
**A)** 1/1000 மி.மீ **B)** 1/10,000 மி.மீ
**C)** 1/100 மி.மீ **D)** 1/10,00,000 மி.மீ

12. கீழ்காண்பவற்றுள் மாறுபட்ட ஒன்று எது?
**A)** அமீபா **B)** குளோரெல்லா
**C)** ஹைடிரா **D)** யூக்ளினா

13. பின்வரும் வாக்கியங்களைக் கவனி
(i) குளோரெல்லா என்பது நகரும் தன்மையற்ற ஒரு செல் பாசி.
(ii) எண்டோபிளாச வலை செல்லுக்குள்ளேயே கடத்தல் பணி நடைபெற உதவுகின்றது. இவற்றுள்:
**A)** இரண்டும் சரி **B)** இரண்டும் தவறு
**C)** (i) மட்டும் சரி **D)** (ii) மட்டும் சரி

14. இது இயக்கத்திற்குப் பயன்படுகிறது
**A)** புறத்தோல் திசு **B)** தசைத் திசு
**C)** நரம்புத் திசு **D)** இணைப்புத் திசு

15. மனித இதயம் எத்தனை அறைகளைக் கொண்டது?
**A)** ஒன்று **B)** இரண்டு
**C)** மூன்று **D)** நான்கு

16. மகாதமனி இங்கிருந்து புறப்படுகிறது
**A)** இடது ஆரிக்கிள் **B)** இடது வென்ட்ரிக்கிள்
**C)** வலது ஆரிக்கிள் **D)** வலது வென்ட்ரிக்கிள்

17. இடது ஆரிக்கிளுக்கும், இடது வென்ட்ரிக்கிளுக்கும் இடையே உள்ள துளையை பாதுகாப்பது
**A)** மூவிதழ் வால்வு **B)** மிட்ரல் வால்வு
**C)** பிறை வடிவ வால்வு **D)** இவற்றுள் ஏதுமில்லை

18. எத்தனை நுரையீரல் சிரைகள் இடது ஆரிக்கிளில் திறக்கின்றன?
**A)** ஒன்று **B)** இரண்டு
**C)** மூன்று **D)** நான்கு

19. குறியீடுகளைக் கொண்டு சரியாகப் பொருத்துக
a) இதயம் சுருங்குதல் - 1. சிஸ்டோல்
b) இதயம் விரிதல் - 2. டயஸ்டோல்
c) தடுப்புச் சுவர் - 3. செப்டா
d) சென்ட்ரோசோம் - 4. செல் பகுப்படைதல்

குறியீடுகள்:

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| **A)** | 1 | 3 | 2 | 1 |
| **B)** | 2 | 1 | 3 | 4 |
| **C)** | 1 | 2 | 3 | 4 |
| **D)** | 4 | 3 | 2 | 1 |

7th - BIOLOGY

20. மனித இதயத்தின் இரத்தக்குழாய்கள் எத்தனை வகைப்படும்?
**A)** ஒன்று **B)** இரண்டு
**C)** மூன்று **D)** நான்கு

21. குறியீடுகளைக் கொண்டு சரியாகப் பொருத்துக
a) சல்லி வேர்கள் - 1. மூங்கில்
b) இலை வேர்கள் - 2. கோலியஸ்
c) வேற்றிட வேர்கள் - 3. போகோஸ்ட்டிமான்
d) பட்ரஸ் வேர்கள் - 4. இலவம் பஞ்சு மரம்
குறியீடுகள்:

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| **A)** | 1 | 2 | 4 | 3 |
| **B)** | 1 | 3 | 2 | 4 |
| **C)** | 1 | 2 | 3 | 4 |
| **D)** | 4 | 3 | 2 | 1 |

22. சுவாச வேர்கள் இவற்றில் காணப்படுகிறது
**A)** பிரையோ.ஃ.பில்லம் **B)** கோலியஸ்
**C)** கரும்பு **D)** ரைசோ.ஃ.போரா

23. தவறான ஒன்றைக் காண்க
**A)** அவிசினியாவில் சுவாச வேர்கள் காணப்படுகிறது.
**B)** கரும்பில் சல்லி வேர்கள் காணப்படுகிறது.
**C)** பிரையோ.ஃ.பில்லத்தில் வேற்றிட வேர்கள் காணப்படுகிறது.
**D)** கோலியஸில் பற்றி ஏறும் வேர்கள் காணப்படுகிறது.

24. "புல்பில்" இதற்கான மாற்றுருவாகும்
**A)** உணவு தயாரிப்பதற்காக **B)** பாதுகாப்பிற்காக
**C)** படர்வதற்காக **D)** உடல் இனப்பெருக்கத்திற்காக

25. நீரில் மிதக்கும் தாவரத்திற்கு எடுத்துக்காட்டு
**A)** தாமரை **B)** ஹைட்ரில்லா
**C)** பிஸ்டியா **D)** அல்லி

26. மூன்றாம் நிலை நுகர்வோர் எது?
**A)** நரி **B)** சிங்கம்
**C)** ஓநாய் **D)** முயல்

27. "புல்பில்" இதில் காணப்படுகிறது
**A)** வெங்காயம் **B)** மிளகாய்
**C)** கத்தரி **D)** தக்காளி

28. விரலிடைச்சவ்வு (பெட்டாஜியம்) எனப்படும் தோல்சவ்வின் உதவியால் பறப்பது
**A)** கைட்டான் **B)** டிராக்கோ
**C)** புரோட்டியஸ் **D)** லிஜியா

7th - BIOLOGY

29. மனித இதயம் எந்த உறையினால் சூழப்பட்டுள்ளது?
**A)** ஒற்றைச் சுவர் பெரிகார்டியம் **B)** இரட்டைச் சுவர் பெரிகார்டியம்
**C)** மும்மைச் சுவர் பெரிகார்டியம் **D)** இவற்றுள் ஏதுமில்லை

30. பின்வரும் வாக்கியங்களைக் கவனி
(i) சுவாசிக்கும் வேர்கள் 'நிமட்டோபோர்கள்' என அழைக்கப்படுகின்றன.
(ii) சதுப்பு நிலம், உப்பு ஏரிகளிலுள்ள தாவரத்தில் இவ்வகை வேர்கள் காணப்படுகின்றன.
இவற்றுள்:
**A)** (i) சரி, (ii) தவறு **B)** (i) சரி, (ii) சரி
**C)** (i) தவறு, (ii) சரி **D)** (i) தவறு, (ii) தவறு

31. பூவாத்தாவரங்கள் என்பது
**A)** ஜிம்னோஸ்பெர்ம் **B)** ஆஞ்ஜியோஸ்பெர்ம்
**C)** ∴பெனெரோகேம்கள் **D)** கிரிப்டோகேம்கள்

32. பூக்கும் தாவரத்திற்கு எடுத்துக்காட்டு
**A)** காசித் தும்பை **B)** பாசிகள்
**C)** மாஸ் **D)** பெரணிகள்

33. ஸ்போரோ∴பைட்டின் முதல் செல்
**A)** ஸ்போர்கள் **B)** ஸ்போரோ∴பைட்
**C)** சைகோட் **D)** தாலஸ்

34. பெரணி தாவரத்தின் இலைகள் இவ்வாறு அழைக்கப்படுகின்றன
**A)** சர்சினேட் **B)** ரேமன்ட்டா
**C)** சோரைகள் **D)** ∴பிராண்டுகள்

35. கரப்பான் பூச்சியின் இளம் உயிரி 'நிம்∴ப்' எத்தனை முறை தோலுரித்துவிட்டு முழு வளர்ச்சியடைகிறது?
**A)** ஆறு **B)** ஏழு
**C)** எட்டு **D)** ஒன்பது

36. பின்வரும் வாக்கியங்களைக் கவனி
(i) ஆண் தவளையில் இரு குரல்பைகள் காணப்படுகிறது.
(ii) குளோயக்கா தவளையின் பொதுப் புழையாகும்.
(iii) ஆண் தவளையின் பின்னங்காலில் களவித் திண்டு காணப்படுகிறது.
இவற்றுள்:
**A)** அனைத்தும் சரி **B)** (i) சரி, (iii) சரி
**C)** (i) சரி, (ii) சரி **D)** (iii) மட்டும் சரி

37. இது தண்டு சார்ந்த ஒட்டுண்ணி
**A)** விஸ்கம் ஆல்பம் **B)** யூக்ளினா
**C)** நாடாப் புழு **D)** அட்டை

7th - BIOLOGY

38. குறியீடுகளைக் கொண்டு சரியாகப் பொருத்துக

a) புற ஒட்டுண்ணி - 1. அட்டைகள்
b) அக ஒட்டுண்ணி - 2. உருளைப் புழு
c) சாறுண்ணி - 3. விஸ்கம் ஆல்பம்
d) தண்டு ஒட்டுண்ணி - 4. அகாரிகஸ்

குறியீடுகள்:

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| **A)** | 1 | 2 | 4 | 3 |
| **B)** | 1 | 3 | 2 | 4 |
| **C)** | 1 | 2 | 3 | 4 |
| **D)** | 4 | 3 | 2 | 1 |

39. இது சன்-டி-யூ தாவரம் எனவும் அழைக்கப்படுகிறது

**A)** டுரோசிரா **B)** அட்ரிகுலேரியா
**C)** நெபந்தஸ் **D)** ரிக்சியா

40. குறியீடுகளைக் கொண்டு சரியாகப் பொருத்துக

a) அல்லி - 1. நிலம்பியம்
b) தாமரை - 2. பிளாடர் வோர்ட்
c) அட்ரிகுலேரியா - 3. நிம்ஃபியா
d) ரிக்சியா - 4. ஹெபாட்டிக்காப்சிடா

குறியீடுகள்:

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| **A)** | 1 | 2 | 4 | 3 |
| **B)** | 3 | 1 | 2 | 4 |
| **C)** | 1 | 2 | 3 | 4 |
| **D)** | 4 | 3 | 2 | 1 |

41. காங்குளோபேட் சுரப்பியை பெற்றுள்ள விலங்கு

**A)** ஆண் தவளை **B)** ஆண் கரப்பான் பூச்சி
**C)** பெண் கரப்பான் பூச்சி **D)** பெண் தவளை

42. உட்கருவைக் கண்டுபிடித்தவர்

**A)** ராபர்ட் ஹுக் **B)** பர்கிஞ்சி
**C)** ராபர்ட் பிரௌன் **D)** மோல்

43. சுரக்கும் தூவிகள் இதில் காணப்படுகிறது

**A)** ஜட்ரோஃபா **B)** நெட்டில்ஸ்
**C)** குக்கர்பிட்டா **D)** தூவிகள்

44. செல் கொள்கையை முன் மொழிந்தவர்கள்

**A)** ஸ்வான் மற்றும் ஸ்லீடன் **B)** ஸ்லீடன் மற்றும் ஹுக்
**C)** பர்கிஞ்சி மற்றும் மோல் **D)** மோல் மற்றும் ஸ்வான்

45. வித்தியாசமான ஒன்றைக் காண்

**A)** நாஸ்டாக் **B)** லெம்னா
**C)** ஆசில்லடோரியா **D)** எஸ்செரிசியா கோலை

7th - BIOLOGY

Send a Message… **ON SMSREADER** to: **09870807070** for FREE ALERTS!

46. புரோட்டோபிளாசத்தை 1840-ஆம் கண்டுபிடித்தவர்கள்
**A)** ஸ்வான் மற்றும் ஸ்லீடன் **B)** ஸ்லீடன் மற்றும் ஹுக்
**C)** பர்கிஞ்சி மற்றும் மோல் **D)** மோல் மற்றும் ஸ்வான்

47. பசுங்கணிகங்களைக் கொண்ட பாரன்கைமா இவ்வாறு அழைக்கப்படுகிறது
**A)** ஏரன்கைமா **B)** குளோரென்கைமா
**C)** கோலன்கைமா **D)** ஸ்கிளிரென்கைமா

48. இறந்த செல்கள் எனப்படுவது
**A)** ஏரன்கைமா **B)** குளோரென்கைமா
**C)** கோலன்கைமா **D)** ஸ்கிளிரென்கைமா

49. ஹாவர்ஷியன் குழாய்கள் இதில் காணப்படுகிறது
**A)** எலும்புத் திசு **B)** நரம்புத் திசு
**C)** இரத்தத் திசு **D)** இனப்பெருக்கத் திசு

50. பிளாஸ்மாவில் காணப்படும் நீர் மற்றும் புரோட்டீன்களின் சதவீதம் முறையே
**A)** 90 மற்றும் 10 **B)** 85 மற்றும் 15
**C)** 65 மற்றும் 35 **D)** 55 மற்றும் 45

51. இவற்றில் உட்கரு உண்டு
**A)** இரத்த வெள்ளை செல்கள் **B)** இரத்த சிகப்பு செல்கள்
**C)** பிளேட்லெட்டுகள் **D)** இவற்றில் ஏதுமில்லை

52. வேரின் புறவெளி அடுக்கு
**A)** எப்பிபிளெமா **B)** கியூட்டிகிள்
**C)** டிரைகோம்கள் **D)** ஸடெல்லேட்

53. இவ்வடுக்கில் தோலின் நிறத்திற்குக் காரணமான மெலனின் நிறமித் துணுக்குகள் அமைந்துள்ளன
**A)** மல்பீஜியன் அடுக்கு **B)** அக அடுக்கு
**C)** மேற்புற அடுக்கு **D)** நடு அடுக்கு

54. காண்டாமிருகத்தின் கொம்பு இதனால் ஆனது
**A)** உரோமக் கற்றைகள் **B)** எலும்பு
**C)** தசை நார்கள் **D)** சைக்ளாய்டு செதில்கள்

55. மீன்களின் தோலில் காணப்படும் செதில்களின் வகைகள்
**A)** ஒன்று **B)** இரண்டு
**C)** மூன்று **D)** நான்கு

56. பின்வரும் வாக்கியங்களைக் கவனி
(i) உரோமங்கள் பாலூட்டிகளில் மட்டுமே காணப்படுகின்றன.
(ii) பறவைகளின் புறச்சட்டகமே இறகுகள் எனப்படும்
இவற்றுள்:
**A)** இரண்டும் தவறு **B)** (i) மட்டும் சரி
**C)** இரண்டும் சரி **D)** (ii) மட்டும் சரி

7th. BIOLOGY

57. குறியீடுகளைக் கொண்டு சரியாகப் பொருத்துக

a) பாறை மண்டலம் - 1. ஹைட்ரோஸ்பியர்
b) நீர் மண்டலம் - 2. லித்தோஸ்பியர்
c) வளி மண்டலம் - 3. அட்மோஸ்பியர்
d) வெட்டுக்கிளி - 4. தாவர உண்ணி

குறியீடுகள்:

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| **A)** | 1 | 2 | 4 | 3 |
| **B)** | 2 | 1 | 3 | 4 |
| **C)** | 1 | 2 | 3 | 4 |
| **D)** | 4 | 3 | 2 | 1 |

58. கடல் மட்டத்திலிருந்து எவ்வளவு ஆழம் வரை உயிரினங்கள் வாழ்கின்றன
**A)** 4 கி.மீ. **B)** 6 கி.மீ.
**C)** 8 கி.மீ. **D)** 10 கி.மீ.

59. வித்தியாசமான ஒன்றைக் காண்
**A)** நெல் **B)** ஹைடிரில்லா
**C)** மார்சீலியா **D)** பிஸ்டியா

60. நீருள்ள சூழலில் வளரும் விலங்குகள்
**A)** ஹைட்ரோ.ஃ.பைட்ஸ் **B)** ஹைட்ரோசீல்
**C)** அக்குவாட்டிக் **D)** இவற்றில் ஏதுமில்லை

61. இரத்த சிவப்பணுக்களில் பிளாஸ்மோடியம் இருப்பதை முதன் முதலில் கண்டறிந்தவர்
**A)** ரோனால்டு ராஸ் **B)** லாவேர்ன்
**C)** ஜான் டால்டன் **D)** மோல்

62. இதில் கூட்டுயிரித்துவம் காணப்படுகிறது
**A)** லைக்கன் **B)** வாண்டா
**C)** கடல் சாமந்தி **D)** டோடர்

63. ஒட்டுண்ணித்துவம் காணப்படும் உயிரிக்கு எடுத்துக்காட்டு
**A)** லைக்கன் **B)** வாண்டா
**C)** கடல் சாமந்தி **D)** டோடர்

64. கண்ணா தேசியப் பூங்கா (மாண்டியா) அமைந்துள்ள மாநிலம்
**A)** தமிழ்நாடு **B)** கர்நாடகா
**C)** மத்தியப்பிரதேசம் **D)** உத்திரப்பிரதேசம்

65. IUCN அமைந்துள்ள இடம்
**A)** நார்வே **B)** மார்கீஸ்
**C)** பிரிட்டன் **D)** மடகாஸ்கர்

66. இந்திய காட்டுவாழ் உயிரிகள் வாரியம் நிறுவப்பட்ட ஆண்டு
**A)** 1952 **B)** 1962
**C)** 1972 **D)** 1982

7th - BIOLOGY

67. ‘வனவிலங்கு வாரம்’ இந்த ஆண்டு முதல் அனுசரிக்கப்பட்டு வருகிறது
**A)** 1950 **B)** 1952
**C)** 1955 **D)** 1956

68. இந்திய அரசாங்கம் வனவாழ் பாதுகாப்புச் சட்டத்தை நடைமுறைக்கு கொண்டுவந்த ஆண்டு
**A)** 1952 **B)** 1962
**C)** 1972 **D)** 1982

69. தேசியப் பூங்காக்கள் மற்றும் பாதுகாக்கப்பட்ட உயிர்கோளங்கள் அமைத்தல் திட்டம் தொடங்கப்பட்ட ஆண்டு
**A)** 1986 **B)** 1955
**C)** 1972 **D)** 1952

70. புகையில் உள்ள வேதிப்பொருள்
**A)** பென்சோபைரின் **B)** பாஸ்போ.:.பீன்
**C)** பொலோனியம் - 280 **D)** பொலோனியம் - 230

71. காட்மியத்தால் மாசுற்ற நீர் தோற்றுவிக்கும் நோய்
**A)** எம்.:.பைசீமா **B)** ஆஸ்துமா
**C)** இதய நோய் **D)** இட்டா - இட்டா

72. மனித உடல் ஏற்றுக்கொள்ளக் கூடிய அதிக .:.புளூரின் அளவு லிட்டருக்கு (நீரில்)
**A)** 1.0 மி.கி. **B)** 1.5 மி.கி.
**C)** 2.0 மி.கி. **D)** 2.5 மி.கி.

73. வடகிழக்கு இமாலய பகுதிகளை உள்ளடக்கிய வனவிலங்கு பாதுகாப்பகம்
**A)** உத்திரகான் **B)** நந்ததேவி
**C)** நீலகிரி **D)** நோக்ரேக்

74. உயிரற்ற காரணிக்கு உதாரணம்
**A)** நெல் **B)** வெட்டுக்கிளி
**C)** தவளை **D)** நீர்

75. மனிதனின் கேட்கும் திறன்
**A)** 61 dB - 81 dB **B)** 81 dB - 140 dB
**C)** 81 dB - 120 dB **D)** 61 dB - 120 dB

76. தானிய உற்பத்தியில் பூச்சிகளின் செயல்பாடுகளால் அழிக்கப்படும் சதவீதம்
**A)** 28% **B)** 30%
**C)** 32% **D)** 40%

77. கரப்பான் பூச்சி ஒரு
**A)** ஊன் உண்ணி **B)** தாவர உண்ணி
**C)** 2-ம் நிலை ஊன் உண்ணி **D)** அனைத்துண்ணி

7th - BIOLOGY

78. எலியைக் கொல்லுவதற்கு பயன்படுத்தப்படும் பூச்சிக் கொல்லி
**A)** அலுமினியம் பாஸ்பைடு **B)** பைரித்ரம்
**C)** துத்தநாக பாஸ்பைடு **D)** D.D.T

79. பழப்பூச்சிகளின் புழுக்கள் இதைத் தாக்கி சிதைவடையச் செய்கின்றன
**A)** ஆரஞ்சுக் கனி **B)** ஆப்பிள் கனி
**C)** மாங்கனி **D)** எலுமிச்சை

80. உருளைக்கிழங்கில் உள்ள புரதம் மற்றும் ஸ்டார்சின் அளவு முறையே
**A)** 24% மற்றும் 16% **B)** 6% மற்றும் 16%
**C)** 2% மற்றும் 17% **D)** 20% மற்றும் 14%

81. வாழையின் உச்சின் கொத்து நோய்க்கான வைரஸைப் பரப்புவது
**A)** தழுப்பு அந்துப்பூச்சி **B)** புண்பொருக்கு அந்துப்பூச்சி
**C)** வாழை த்ரிப்ஸ் **D)** வாழை ஏபிட்

82. கரும்பில் 30% லிருந்து 70% சர்க்கரை அளவு குறைவதற்கு காரணமாக இருப்பது
**A)** கரும்பு உமிழும் பூச்சி **B)** கரும்பு கரையான் பூச்சி
**C)** கரும்பு செதில் பூச்சி **D)** கரும்புத் தண்டு தெள்ளுப் பூச்சி

83. கிரிக்கெட் குறிக்கொம்பு (Cricket Stump) இந்த மரத்திலிருந்து தயாரிக்கப்படுகின்றன
**A)** வில்லோ **B)** மல்பெரி
**C)** சந்தனம் **D)** தேக்கு

84. ஆஸ்துமாவை குணப்படுத்த பயன்படுவது
**A)** அகாத்திஸ் **B)** எபிட்ரின்
**C)** பென்சோபைரின் **D)** காண்டாமிருகம்

85. தேன் சேகரிப்பு கிராம குடிசைத் தொழிலாக நடைபெறும் இடம்
**A)** மார்த்தாண்டம் **B)** காரைக்குடி
**C)** கீழ்பாக்கம் **D)** மன்னார்குடி

86. ஒரு தேன் கூட்டில் காணப்படும் இராணி தேனீகளின் எண்ணிக்கை
**A)** ஒன்று **B)** இரண்டு
**C)** மூன்று **D)** நான்கு

87. பின்வரும் வாக்கியங்களைக் கவனி
(i) வைட்டமின்கள் ஆற்றல் அளிப்பவையோ, வளர்ச்சி அளிப்பவையோ அல்ல.
(ii) தாது உப்புகள் உறுப்புகளின் சீரான இயக்கத்திற்கு அவசியம் தேவை.
இவற்றுள்:
**A)** இரண்டும் தவறு **B)** (i) மட்டும் சரி
**C)** இரண்டும் சரி **D)** (ii) மட்டும் சரி

7th - BIOLOGY

88. குறியீடுகளைக் கொண்டு சரியாகப் பொருத்துக

a) மஞ்சள் - 1. கர்கூமா டொமஸ்டிகா
b) இலவங்கப்பட்டை - 2. சிஸிஜியம் அரோமேட்டிகம்
c) கிராம்பு - 3. சின்னமோம் ஸிலானிக்கம்
d) மிளகாய் - 4. காப்சிகம் புருட்டெசென்ஸ்

குறியீடுகள்:

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| **A)** | 1 | 2 | 4 | 3 |
| **B)** | 2 | 1 | 3 | 4 |
| **C)** | 1 | 3 | 2 | 4 |
| **D)** | 4 | 3 | 2 | 1 |

89. 'பிராசிகா ஹிர்டா' என்பது இதன் இருசொற்பெயர் ஆகும்
**A)** கடுகு **B)** சாஃபவர்
**C)** ஏலக்காய் **D)** மிளகு

90. இரத்த சோகை இதன் குறைவினால் ஏற்படுகிறது
**A)** வைட்டமின் - $B_1$ **B)** வைட்டமின் - A
**C)** வைட்டமின் - $B_{12}$ **D)** வைட்டமின் - K

91. வைட்டமின் D குறைவினால் சிறுவர்களுக்கு ஏற்படுவது
**A)** ஸ்கர்வி **B)** ரிக்கெட்ஸ்
**C)** ஆஸ்டியோ மலேசியா **D)** பெரி-பெரி

92. இந்நோய் ஒரு வயது கூட நிரம்பாத குழந்தைகளை பாதிக்கிறது
**A)** குவாஷியோர்கர் **B)** மராஸ்மஸ்
**C)** ஆஸ்டியோ மலேசியா **D)** ஸ்கர்வி

93. பற்கூழ் குழியை சுற்றி காணப்படும் சிறப்பு செல்கள்
**A)** டென்டைன் **B)** ஓடண்டோ பிளாஸ்ட்
**C)** எனாமல் **D)** சிமெண்ட்

94. மனிதரில் காணப்படும் பற்களின் வகைகள்
**A)** ஒன்று **B)** இரண்டு
**C)** மூன்று **D)** நான்கு

95. இரத்த சிவப்பணுக்கள் குறைவினால் ஏற்படும் நோய்
**A)** அனீமியா **B)** பாலிசைதீமியா
**C)** லியூக்கோபினியா **D)** லியூக்கோமியா

96. அழிவுரும் விலங்குகளின் தகவல் புத்தகம் (Red Data Book) எங்கு பராமரிக்கப்படுகிறது?
**A)** ஸ்வீடன் **B)** ஸ்விட்சர்லாந்து
**C)** ஸ்காட்லாந்து **D)** இங்கிலாந்து

7th - BIOLOGY

Send a Message… **ON SMSREADER** to: **09870807070** for FREE ALERTS!

97. அச்சடித்த காகிதத்தில் அதிக அளவு காணப்படும் வேதிப்பொருள்

**A)** கார்பன் **B)** காரீயம்
**C)** காட்மியம் **D)** கந்தகம்

98. பல உட்கருக்களை உடைய ஒரு செல் ஒட்டுண்ணி

**A)** பிளாஸ்மோடியம் **B)** டோடர்
**C)** ஆஸ்ட்டோரியம் **D)** இவற்றில் ஏதுமில்லை

99. பின்வரும் கூற்றுக்களைக் கவனி

(i) மனித உடலில் அனைத்துவகை வைட்டமின்களையும் உருவாக்க முடியாது.
(ii) மனிதப் பெருங்குடலில் வாழும் சில பாக்டீரியாக்கள் குறைந்த அளவு வைட்டமின் K யினை உற்பத்தி செய்கின்றன.

இவற்றுள்:

**A)** இரண்டும் தவறு **B)** (i) மட்டும் சரி
**C)** இரண்டும் சரி **D)** (ii) மட்டும் சரி

100. இரண்டு தேசியக் கொடிகளைக் கொண்ட நாடு எது?

**A)** ஆப்கானிஸ்தான் **B)** பிலிப்பைன்ஸ்
**C)** ஸ்வீடன் **D)**ஆஸ்திரேலியா

வாழ்த்துக்களுடன்… தி. சிவக்குமார்…

********

7th - BIOLOGY

## $7^{th}$ Biology Keys

| Q. No. | Answer | Q. No. | Answer | Q. No. | Answer | Q. No. | Answer |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | B | 26 | B | 51 | A | 76 | B |
| 02 | A | 27 | A | 52 | A | 77 | D |
| 03 | B | 28 | B | 53 | A | 78 | C |
| 04 | D | 29 | B | 54 | A | 79 | A |
| 05 | C | 30 | B | 55 | C | 80 | C |
| 06 | B | 31 | D | 56 | C | 81 | D |
| 07 | A | 32 | A | 57 | B | 82 | A |
| 08 | D | 33 | C | 58 | A | 83 | B |
| 09 | B | 34 | D | 59 | A | 84 | B |
| 10 | C | 35 | B | 60 | B | 85 | A |
| 11 | A | 36 | C | 61 | B | 86 | A |
| 12 | C | 37 | A | 62 | A | 87 | B |
| 13 | A | 38 | A | 63 | D | 88 | C |
| 14 | B | 39 | A | 64 | C | 89 | A |
| 15 | D | 40 | B | 65 | B | 90 | C |
| 16 | B | 41 | B | 66 | A | 91 | B |
| 17 | B | 42 | C | 67 | C | 92 | B |
| 18 | D | 43 | A | 68 | C | 93 | B |
| 19 | C | 44 | A | 69 | A | 94 | D |
| 20 | C | 45 | B | 70 | A | 95 | A |
| 21 | B | 46 | C | 71 | D | 96 | B |
| 22 | D | 47 | B | 72 | B | 97 | B |
| 23 | D | 48 | D | 73 | D | 98 | A |
| 24 | D | 49 | A | 74 | D | 99 | C |
| 25 | C | 50 | A | 75 | C | 100 | A |

7th PGV